கடைசிக் காலம் மறுபடியும் வந்துவிட்டதா?

வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்

கொரோனா கிருமிகள் வந்த நாளிலிருந்து இன்றுவரை கிறிஸ்தவர்கள் வாயிலிருந்து “கடைசிக் காலம் வந்துவிட்டது” என்னும் வார்த்தையே வந்துகொண்டிருக்கிறது. ஆனால், கொரோனா கிருமிகள் வந்ததினால்தான் இத்தகைய செய்திகள் இன்றைக்கு வருகின்றன என்று நாம் எண்ணலாகாது. ஏனெனில், “அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பிசாசு” என்பதுபோல, உலகில் எப்போதெல்லாம் யுத்தங்கள், வியாதிகள், இயற்கை அழிவுகள் ஏற்பட்டனவோ, அப்போதெல்லாம் கடைசிக் காலம் வந்துவிட்டது என்று இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கு நாள் குறிப்பவர்களாகவே கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். இதனால்தான், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே கடைசிக் காலம் வந்துவிட்டது என்றும், தங்களுடைய காலத்திலேயே இயேசுகிறிஸ்து வந்துவிடுவார் என்றும் கிறிஸ்தவர்கள் நம்பினார்கள்.[1] எனினும், இரண்டாம் நூற்றாண்டில் வழ்ந்த “ஹிப்போலிட்டஸ்” (Hippolytus) என்பவர் கி.பி.500ஆம் ஆண்டு உலகின் முடிவாக இருக்கும் என்று போதித்தார். இதைப்போலவே “ஆ.்.ப்ரிக்கானஸ்” (Africanus) என்பவரும் அரம்பத்தில் கி.பி.500இல் உலகம் அழிந்துவிடும் என்று கூறினாலும், பிற்காலத்தில் இது 800ஆம் ஆண்டில் நடைபெறும் என்று தெரிவித்தார்.[2] ஆனாலும், கி.பி.500இலோ அல்லது கி.பி.800இலோ உலகம் அழியவில்லை. மேலும், சின்ன ஆசியாவிலுள்ள “பிர்கியா” என்னும் பிரதேசத்தைச் சேர்ந்த “மொன்டனஸ்” (Montanus) என்பவனும், “பிரிஸ்கா” ”மெக்ஸ்சிமில்லா” என்னும் இரண்டு பெண்களும், தங்களைப் “பரிசுத்தாவியானவரின் செய்தியாளர்கள்” என்று அறிவித்துக்கொண்டு, தங்களுடைய காலத்தில் புதிய எருசலேம் பிர்கியவில் ஸ்தாபிக்கப்படும் என்று போதித்தனர்.[3] ஆனால், இவர்கள் கூறியவிதமாக இரண்டாம் நூற்றாண்டில் எதுவும் நடைபெறவில்லை. இதைப்போலவே, மூன்றாம் நூற்றாண்டில் “நொவேத்தியன்” (Novatian) என்பவனும், நான்காம் நூற்றாண்டில் “டொனாட்டஸ்” (Donatus) என்பவனும் தங்களைத் தீர்க்கதரிசிகள் என்று அழைத்துக்கொண்டு கடைசிக் காலம் வந்துவிட்டது இயேசுகிறிஸ்து வரப்போகின்றார் என்று அறிவித்துக்கொண்டிருந்தனர்.[4] ஆனால் இவர்கள் கூறியவிதமாகவும் அக்காலங்களில் எதுவும் நடக்கவில்லை. அதன் பின்னர், கி.பி.410இல் ஜெர்மனியர்களினால் ரோம நகரம் தாக்கப்பட்ட போதும், உலகத்தின் முடிவு வந்துவிட்டது என்று கிறிஸ்தவர்கள் கூறினார்கள். கி.பி.1209 முதல் 1244 வரை ரோம சபை வேதப்புரட்டர்களுக்கு கடுமையான தண்டனைகள் கொடுத்த காலத்திலும் உலகத்தின் முடிவு வந்துவிட்டது என்றே கிறிஸ்தவர்கள் போதித்தனர். இதன்பின்னர் கி.பி.1347-1350இல் ஏற்பட்ட “கருப்பு வாதையினால்” பல மில்லியன் மக்கள் மரித்தபோதும் கடைசிக்காலம் வந்துவிட்டது என்றே கிறிஸ்தவர்கள் கதறினார்கள்.[5]

கி.பி.999ஆம் ஆண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் 1000ஆம் ஆண்டு வரும்போது அதுவே கடைசிக் காலம் என்றும், அதோடு உலகம் அழிந்துவிடும் என்றும் எண்ணினார்கள். இதனால், 999ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்களுடைய சொத்துகளை ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு, அழுகையோடும் நடுக்கத்தோடும் ரோமிலிருக்கும் பேதுருவின் ஆலயத்தில் இயேசுகிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருந்தனர்.[6] மேலும், ஐரோப்பாவிலிருந்த சிலர் தங்களுடைய சொத்துகளை விற்றுவிட்டு, எருசலேமுக்குப் போய் இயேசுகிறிஸ்துவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.[7] இதைப்போலவே 1100, 1200, 1245ஆம் ஆண்டுகளிலும் இயேசுகிறிஸ்து வருவார் என்னும் நம்பிக்கையோடு கிறிஸ்தவர்கள் இருந்தனர். மேலும், 1531இல், “மெல்கொயர் ஹொ.்.ப்மான்” (Melchior Hofmann) என்பவர் 1533ஆம் ஆண்டு

---

[1] Ignatius of Antioch, *The Epistle of Ignatius to the Ephesians*, 1:54; J.N.D.Kelly, *Early Christian Doctrines*, pp. 467-469.

[2] Rubinsský, Yuri, I.Wiseman, *A History of the End of the World*, p. 56; J.L.Gonzalez, *History of Christian Thought Volume 1*, pp. 235-237. Nashville: Abingdon Press, 1970.

[3] R.E.Olson, *The Story of Christian Theology: Twenty Centuries of Tradition and Reform*, p. 31; T.Dowley, ed., *Handbook to the History of Christianity*, p. 74. (Eerdmans, 1977). W.H.C.Frend, “Montanism: A Movement of Prophecy and regional Identity in the Early Church” In *Bulletin of the John Rylands University of Manchester*, 70 (Autumn 1988), pp. 29-34.

[4] G.DeMar, *Last Days Madness: Obsession of the Modern Church*, p. 21.

[5] O.Friedrich, *The End of the World: A History*, p. 116.

[6] R.Erdoes, *AD1000: Living on the Brink of Apocalypse*, p. 1; R.Erdoes, “The Year 2000” In *Psychology*, 23.5 1989), p. 44.

[7] G.DeMar, *Last Days Madness: Obsession of the Modern Church*, p. 23.

இயேசுகிறிஸ்து வருவார் என்று அறிவித்தார். அதன்பின்னர் 1734இல் இயேசுகிறிஸ்து வருவார் என்று "நிக்கொலஸ் கூசா" (Nicholas Cusa) என்பவர் அறிவித்தார்.[8] இதைப்போலவே கி.பி.2000ஆம் ஆண்டு வருவதற்கு முன்பும் இதேவிதமான எண்ணம் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்ததை நாம் அனைவரும் அறிவோம். ஏனெனில், 2000ஆம் ஆண்டு வரும்போது, இயேசுகிறிஸ்து எருசலேமில் தம்முடைய ஆயிரவருஷ ஆட்சியை ஆரம்பிப்பார் என்றும் தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டன.[9] ஆனால், சிலர் இதற்கும் முன்பே 1979இலும், வேறு சிலர் 1980இலும் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சி அரம்பமாகும் என்று அறிவித்தார்கள். மேலும், சிலர் 1981இலும் பலர் 1988இலும் உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படும் என்றும் கூறினார்கள். போதாதகுறைக்கு, எட்கர் வைஸ்னன்ட (Edgar Whisenant) என்பவர் சபை ஏன் 1988இல் எடுத்துக்கொள்ளப்படும் என்பதற்கு 88 காரணங்களையும் தெரிவித்தார்.[10] ஆனால், 1988இல் சபை எடுத்துக்கொள்ளப்படாததினால், தன்னுடைய கணிப்பீட்டில் ஒரு தவறு ஏற்பட்டு விட்டது என்றும், 1989இல் இது கட்டாயம் நடைபெறும் என்றும் கூறினார்.[11] எனினும், வேதாகமத்தில் தவறு இருந்தால் மாத்திரமே தன்னுடைய கணிப்பீட்டில் தவறு இருக்கும் என்று 1988இல் கூறியிருந்த இவர்,[12] அவ்வாண்டு சபை எடுத்துக்கொள்ளப்படாததினால் தன்னுடைய கணிப்பீட்டில் தவறு உள்ளதாகத் தெரிவித்தார். இதைப்போலவே, 1992 ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி சபை எடுத்துக் கொள்ளப்படும் என்று கொரியாவின் பத்திரிகைகளில் விளம்பரச் செய்தி வெளியிடப்பட்டது. ஆனால், 1992ஆம் ஆண்டு எதுவும் நடைபெறாததினால், தேவனிடமிருந்து பிழையான செய்தியைப் பெற்றுவிட்டோம் என்று இச்செய்தியைப் பிரசுரித்தவர்கள் கூறினார்கள்.[13] இதைப் போலவே 1992இலும் 1994இலும், இயேசுகிறிஸ்து வருவார் என்று அறிவித்தவர்களும்,[14] 2000ஆம் ஆண்டு உலகம் அழிந்துவிடும் என்றும் வாதிட்டவர்களும்,[15] தாங்களே வெளிப்படுத்தல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு சாட்சிகள் என்று தங்களை அறிமுகப்படுத்தியவர்களும் இருந்தனர்.[16] மேலும், மத்திய கிழக்கில் ஏதாவது ஒரு யுத்தம் நடைபெற்றுவிட்டால் அர்மெகெதோன் யுத்தம் வந்துவிட்டது என்று புலம்பகிறவர்களாகவும் கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர்.[17]

கி.பி.16ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபையில் சீர்த்திருத்தத்தை ஏற்படுத்திய மாட்டின் லூத்தர்கூட தான் வாழ்வது கடைசிக் காலம் என்றும், இயேசுகிறிஸ்துவின் வருகை தன்னுடைய காலத்திலேயே நடைபெறும் என்னும் நம்பிக்கையுடையவராகவும் இருந்தார். மற்றவர்களைப் போல இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு நாள் குறிப்பவராக இவர் இராவிட்டாலும்கூட, "கடைசி நாள் நெருங்கிவிட்டது. என்னுடைய கலண்டர் முடிவடைந்து விட்டது. இதைவிட வேறெதுவும் என்னுடைய வேதாகமத்தில் இல்லை"[18] என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதைப்போலவே, 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவர்கள் தாங்கள் கடைசிக் காலத்தில் வாழ்கிறோம் என்னும் எண்ணத்தில், இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு நாள் குறிப்பவர்களாக இருந்தனர்.[19] உண்மையில், கடந்த இரண்டாயிரம் வருஷங்களாக ஆயிரத்திற்கும் அதிகமான தடவைகள் இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு கிறிஸ்தவர்கள் நாள் குறித்துள்ளனர்.[20] ஆனால், இவற்றில் எந்த ஒரு தீர்க்கதரிசனமும் நிறைவேறவில்லை. அப்படியிருந்தும், இதையெல்லாம் கருத்திற் கொள்ளாத நிலையிலும், இயேசுகிறிஸ்துவின் மறுவருகை எப்பொழுது நடைபெறும் என்பது நம்மால் அறிந்துகொள்ள முடியாததும், அறிந்துகொள்ளக் கூடாததுமான இரகசியாமாக வைக்கப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள மனமற்ற நிலையிலும் உலகில் ஏதாவது

---

[8] J.C.Souter, "The Sky is Falling" In *Future*, p. 6.

[9] R.Rhodes, "Millennial Madness" In *Christian Research Journal*, (Fall 1990), p. 39.

[10] E.C.Whisenant, *88 Reasons Why the Rapture Is In 1988*, Nashville: World Bible Society, 1988.

[11] E.Whisenant & G.Brewer, *The Final Shout: Rapture Report 1989*, p. 1.

[12] R.Lyman, *A Critique on the 1988 Rapture Theory*, p. 2.

[13] B.J.Lee, "Sorry, Let's Go Home: Miracle of the Rapture a Non-Show in South Korea" In *Atlanta Constitution*, (29 October 1992), A4.

[14] H.Camping, *1994?*, p. 444.

[15] G.R.Jeffrey, *Armageddon: Appointment with Destiny*, p. 193.

[16] C.Hill, *Prophecy Past and Present: An Explanation of the Prophetic Ministry in the Bible and the Church Today*, p. 5.

[17] D.L.Wilson, *Armageddon Now: The Premillenarian Response to Russia and Israel Since 1917*, p. 13.

[18] M.Noll, "Misreading the Signs of the Times" In *Christianity Today*, (6 February 1987), pp. 10-11; M.U.Edwards, *Luther's Last Battles: Politics and Polemics 1531-1546*, pp. 97-114.

[19] J.E.C.Harrison, *The Second Coming: Popular Millenarianism 1780-1850*, p. 5.

[20] F.X.Gummerlock, *The Day and the Hour: Christianity's Perennial Fascination with Predicting the End of the World* (Atlanta: American Vision, 1999).

நடைபெற்றுவிட்டால் அல்லது, விஞ்ஞானிகள் புதிதாக எதையாவது கண்டுபிடித்துவிட்டால், உடனடியாகக் கடைசிக்காலம் வந்துவிட்டது என்று கதறுவது வேதாகம சத்தியங்களை அறியாத கிறிஸ்தவர்களின் போதனையாகவே உள்ளது. இதனால், இத்தகைய கதறல்களைக் கேட்டு கலக்கமடையாமல், இயேசுகிறிஸ்து நியமிக்கப்பட்ட காலத்தில் நிச்சயமாய் வருவார் என்பதைக் கருத்திற்கொண்டவர்களாக, அன்றாடம் அவரை ஆராதிப்பவர்களாகவும், அவரை அறியாதவர்களுக்கு அவரது அன்பையும் அவர் அருளும் இரட்சிப்பையும் அறிவிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டியது நமது கடமையாயுள்ளது.